TDSB குடும்பத்தினர் அனைவருக்கும்,

2021-22 கல்வியாண்டில் நேரில் கற்பதற்கும் மெய்நிகர் முறையில் கற்பதற்குமான தெரிவுகளைக் கல்விச் சபைகள் வழங்குமென ஒன்ராறியோ அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தது.

இதனைக் கருத்தில் கொண்டு, இணையத்திலுள்ள **நேரில் அல்லது மெய்நிகர் முறையில் கற்பதற்கான தெரிவுப் படிவத்தை** ஆகஸ்ட் நடுப்பகுதியில் பூர்த்திசெய்யுமாறு ரொறன்ரோ மாவட்டக் கல்விச் சபை குடும்பத்தினரைக் கேட்க இருக்கின்றது.

அந்த நேரத்தில், இந்த நோய்ப்பரவல் பற்றியும் பாடசாலைப் பணியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கான தடுப்பூசிகள் பற்றிய நிலை தொடர்பாகவும் புதுப்பிக்கப்பட்ட தகவல்கள் குடும்பத்தினருக்குக் கிடைக்கப்பெறும், அத்துடன் அவர்கள் தகவலறிந்த தீர்மானம் ஒன்றை எடுக்கக்கூடிய ஒரு சிறந்த நிலையில் இருப்பார்கள். பாடசாலையில் நேரில் கல்வி கற்றல் தொடர்பில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய தகவல்களையும் சமகால, மெய்நிகர்முறைக் கற்றல் எவ்வாறு வழங்கப்படும் என்பது பற்றிய கூடுதலான விபரங்களையும் வழங்கக்கூடிய ஒரு சிறந்த நிலையில் TDSB இருக்கும்.

தற்போது நடைமுறையில் இருக்கும் மெய்நிகர் பாடசாலைகள் (ஆரம்பநிலை மற்றும் இரண்டாம்நிலை) 2021-22 கல்வி ஆண்டில் <u>நடாத்தப்படமாட்டாது</u>. மெய்நிகர் முறைக் கற்றல் அவர்கள் கற்கும் பாடசாலைகள் மூலம் வழங்கப்படும், அத்துடன் அவர்களின் பாடசாலையிலுள்ள அல்லது ஒரு பாடசாலைத் தொகுதியிலுள்ள ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்களை உள்ளடக்கிய சமகாலத்தில் நிகழும் இணையமூலக் கற்பித்தலை அது உள்ளடக்கியிருக்கும்.

இந்த நோய்த்தொற்றிலிருந்து படிப்படியாக மீளுவதற்கு நாங்கள் திட்டமிட்டுக்கொண்டிருக்கும்போது, செப்ரெம்பர் 2021 இல் எல்லா மாணவர்களையும் அவர்களுடைய பாடசாலைகளுடன் மீளவும் இணைக்கலாமென நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஆகஸ்ட் நடுப்பகுதியில், TDSB பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் குடும்பத்தவர்களுக்கு அதிக அளவில் தடுப்பூசி கிடைத்துவிடும் என நாங்கள் எதிர்பார்ப்பதுடன், அதிகளவிலான குடும்பங்கள் நேரில் கற்றலைத் தேர்ந்தெடுப்பார்கள் எனவும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

நேரில் மற்றும் மெய்நிகர் முறையில் கற்பதற்கான தெரிவுப் படிவம் பற்றிய மேலதிக தகவல்கள் ஆகஸ்ட் மாதத்தில் குடும்பத்தினருக்கு நேரடியாக மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். அனைத்துத் தகவல்களும் அந்தத் தெரிவுப் படிவமும் TDSB வலைத்தளத்திலும் கிடைக்கப்பெறும்.

வரவிருக்கும் கல்வி ஆண்டிற்கான திட்டமிடலில் நாங்கள் ஒன்றிணைந்து பணியாற்றும் அதேவேளையில் நீங்கள் தொடர்ந்து வழங்கும் ஆதரவுக்கு நன்றி!